<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : S.T.C.528/2022 | Date | : 14.07.2023 |
| Deposition of Witness for | : பு.சா.1 | Taluk | : திருச்செங்கோடு |
| Name | : சங்கர் | Calling | : டீச்சர் |
| Father/Husband Name | : பொன்னுசாமி | Religion | : இந்து |
| Village | : நல்லாம்பாளையம் | Age | : 43 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 14.07.2023.

**<u>முதல் விசாரணை</u>** :

இவ்வழக்கில் நான் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக இத்துடன் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடைதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்று, அதனுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(26.01.2022 -ம் தேதியிட்ட புகார்தாரரின் வங்கியான எச்.டி.எப்.சி வங்கி, சங்ககிரி கிளை கணக்கு எண்.50100252775447-க்கான வரவு செலவு கணக்கு பதிவேடு உண்மை நகல் **பு.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.03.2022 -ம் தேதியிட்ட புகார்தாரரின் வங்கியான இந்தியன் வங்கி, சங்ககிரி கிளையின் கணக்கு எண்.607293634-க்கான வரவு செலவு கணக்கு பதிவேடு உண்மை நகல் **பு.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.12.2021-ம் தேதியிட்ட ரூ.13,92,433/- க்கான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, யூ.ஆர்.சி. நகர், ஈரோடு கிளையின் அசல் காசோலை (எண். 189160) **பு.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.01.2022 -ம் தேதியிட்ட LVB/DBS பேங்க் இந்தியா லிமிடெட், சங்ககிரி கிளையின் அசல் கலெக்சன் ஸ்லீப் **பு.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.02.2022 -ம் தேதியிட்ட LVB/DBS பேங்க் இந்தியா லிமிடெட், சங்ககிரி கிளையின் அசல் ரிட்டன் மெமோ **பு.சா.ஆ.5** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2022- ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **பு.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2022- ம் தேதியிட்ட எதிரிக்கு பதிவு அஞ்சல் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதுகள் (5 எண்ணிக்கை) அசல் **பு.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2022- ம் தேதியிட்ட எதிரிக்கு கொரியர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான கொரியர் ரசீதுகள் (5 எண்ணிக்கை) அசல் **பு.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.02.2022-ம் தேதியிட்ட எதிரியின் நிரந்தர முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **பு.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் இதர முகவரிகளுக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புகள் திரும்பி வந்த தபால்கள் (4 எண்ணிக்கை) **பு.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் முகவரிகளுக்கு கொரியர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புகள் திரும்பி வந்த தபால்கள் (5 எண்ணிக்கை) **பு.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்குவிசாரணை</u>**:

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2023.07.14 14:32:52 +0530

Sd /- Sankar

Judicial Magistrate No.1,
Sankari.